# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 02 ஏப்ரல் 16 - 30 | 2023 விலை 20/-




# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில மோசடி அபகரிப்பு தடுப்பு கூட்டம் நடத்தப்படும்...

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹரிகிரன் பிரசாத் பேட்டி

# உதவி இயக்குநர் திரு. சங்கர் அவர்களுக்கு பாமரனின் கடிதம்...

உதவி இயக்குநர் சங்கர் தனக்கு வீடு இல்லை, நகை இல்லை, வாகனம் இல்லை, செல் இல்லை என்று கூறி நடிகர் திலகத்தை மிஞ்சி விடுவார்.

உதவி இயக்குநர் லஞ்சம் காசு வாங்க மாட்டார். ஆனால், பணம் மட்டும் வாங்குவார்.

ஏரிபுறக்கரை பெரிய ஏரியில் ஏரியை பராமரிப்பு செய்வதாக சொல்லி அதிமுக ஊராட்சி மன்ற தலைவர் சேர்ந்து கொண்டு உதவி இயக்குநர் சங்கர் மணல் எடுத்து விற்று வருகிறார்.

ஊழல்... ஊழல்... எங்கும் ஊழல்...

எதிலும் ஊழல்...

ஏன் இப்படி போனது நம் இனம்...

மனித நேயம் மறந்து போன சில நரக மாமிசங்களால்

ஆம் அவர்களை மனிதர்கள் என்று சொல்வதால்

மனித இனத்திற்கே உன்னால் இழுக்கு என்று எண்ணுகின்றேன்...

கடமையை செய்ய ஏழ்மையிடம் ஏமாற்றி பெறும்

இந்த ஊழல் பணம்...

நீ இறந்தால் உன்னை எரிப்பதற்கு கூட உதவாது

அப்படியிருக்க நீ இருக்கும் போதா உதவப்போகிறது?

என எப்போது தான் நீ உணரப்போகிறாய்...?

நரக மாமிசமே...

நீ மண்ணோடு போகையில் உன்னோடு
ஒட்டியிருக்கும்

அரைஞான் கயிறையும் கூட
வெட்டி எடுக்கும் ...

என்பதை எப்படி மறந்தாய் நீ...

இதுவரை நீ இடுகாடே போனதே
இல்லையா?

இல்லை இனிமேலும் நீ இடுகாடு போக
போவதேயில்லையா...?

ஊர் வயிறெரிய நீ வாங்கும் அந்த ஊழல்
பணம்...

எப்படி உன் சந்ததி காக்கும்...?

உன் ஆறாம் அறிவு கொண்டு ஊரை ஏய்த்தது
போதும்...

இனியேனும் அதை உன்னை மாற்றிட
பயன்படுத்து...

உன் இருண்ட பயணத்தை இதோடு நிறுத்து...

உன் எஞ்சிய பயணத்தையாவது மனிதனாய் தொடர்ந்திடு...

உன் வருங்கால சந்ததிக்கு வளமான அடித்தளம் அமைத்திடு...

ஊழல் ஒழி... உண்மையாய் உழை

மனிதனாய் வேண்டாம்...

தயவு செய்து நல்ல அதிகாரியாக மாறு...



# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)


**உரிமை-8 மீட்பு-02 ஏப்ரல் 16-30 | 2023**

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்.



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.

**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.

**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.

**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.

**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகமது அலி,

**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.

**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.

**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.

**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.

**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.

**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**

Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ்

SGM. ரமேஷ், D.G. தினகரன், N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A. விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**

M. ஞானசேகர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**

M. ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**

D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், M. இளங்கோவன்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**

G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**

M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**

M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**

C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு.

**துணை ஆசிரியர்கள்:**

D.சுரேஷ்குமார், G.சுரேஷ்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**

P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார், M. ஜெய்பிரசாத்

**உதவி ஆசிரியர் குழு:**

K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா.

**நிருபர்கள்:**

M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, R. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி.

**சட்ட ஆலோசகர்கள்:**

C. பாலாஜி BABL, M. ஞானசேகரன் BABL.

**புகைப்பட நிருபர்கள்:**

AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R.S. ராஜேந்திரன், R. ரவி, V. வித்யாவீரப்பன், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**

ஆசிரியர்,

**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**

எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000

Mail: manithurimaigalmeetpu@gmail.com

http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.


எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.


### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**

**-ஆசிரியர்**



# தஞ்சாவூர் மாவட்டம் உதவி இயக்குநர் (ஊராட்சி)

## திரு. சங்கர் AD

# மற்றும் பட்டுக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்

## திரு . கோவிந்தராஜ் PDO

## இருவரும்  இணைந்து

# ஜல் ஜீவன் திட்டத்தில் பல கோடி ஊழல்!

**சா**லைகளின் தரம் உயர்த்துதல் ஊழல்
பாலங்கள் கட்டுதல் ஊழல்
பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் ஊழல்
கிராம தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் ஊழல்
புதிய தெருவிளக்குகள் அமைத்தல் ஊழல்
தெரு விளக்குகளை பராமரித்தல் ஊழல்
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஊழல்
குடிநீர் பராமரிப்பு பணிகள் ஊழல்
பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஊழல்
சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுத்தல் ஊழல்
இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகியவற்றை அமைத்து பராமரித்தல் ஊழல்






தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏரிபுறக்கறை கிராமத்தில் குடிநீர் இணைப்புக் கட்டணமாக ரூ.1,200 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ரூ.6 ஆயிரம் வரை கட்டாய வசூல் செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது

வரும் 2024ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் இலக்குடன் ஜல் ஜீவன் மிஷன் என்கிற திட்டம் மத்திய அரசால் கடந்த 2019ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று தொடங்கப்பட்டது. மாநில அரசின் பங்களிப்புடன் நடைபெறும் இத்திட்டத்தில், மக்கள் குடி நீருக்காக அலையும் நிலையைப் போக்கி, 55 லிட்டர் வரை குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப் பகுதிகளில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்கு தனி நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த குறைந்தபட்ச வைப்புத் தொகையை நிர்ணயம் செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### ஜல் ஜீவன் என்றால் என்ன..?

கிராம தண்ணீர் வழங்கு அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்தல், மேலாண்மை, செயல்பாடு மற்றும் பராமரிப்பில் தண்ணீர் வழங்கும் குழுக்கள் (பானி சமிதி) முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் சீராக நீண்டகால அடிப்படையில் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்குகிறது. 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில், சுமார் 3.5 லட்சம் கிராமங்களில் தண்ணீர் வழங்கும் குழுக்கள் (பானி சமிதி)/ கிராமப்புற தண்ணீர் மற்றும் துப்புரவு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7.1 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கள பரிசோதனை கருவிகளைப் பயன்படுத்தி நீரின் தரத்தை பரிசோதிக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஜல் ஜீவன் இயக்கம் பற்றி பிரதமர் ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்க 15 ஆகஸ்ட், 2019 அன்று, ஜல் ஜீவன் இயக்கத்தை அறிமுகம் செய்தார் அந்த இயக்கம் தொடங்கிய நேரத்தில், 3.23 கோடி கிராமப்புற வீடுகளுக்கு மட்டுமே குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனோ தொற்றுநோய் நெருக்கடி இருந்தபோதிலும், 5 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு குழாய் வழி தண்ணீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றுவரை, சுமார் 8.26 கோடி கிராமப்புற குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெற்றுள்ளன. 78 மாவட்டங்கள், 58 ஆயிரம் கிராம பஞ் சாயத்துகள் மற்றும் 1.16 லட்சம் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு கிராமப்புற வீடுகளும் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெறுகின்றன.



இத்திட்டத்தின் கீழ் பொது மக்கள் பங்களிப்பு நிதியாக ரூ. 1, 200 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையையும் உடனே செலுத்த கட்டாயப்படுத்தவில்லை. கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் குடி நீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

ஜல் ஜீவன் திட்டம் அனைவருக்கும் குடிநீர் வழங்கல் திட்டம்

முந்தைய தண்ணீர் விநியோகத் திட்டங்களில் இருந்து ஒரு முன்னுதாரணமாக, ஜல் ஜீவன் திட்டம் தண்ணீர் விநியோகத்திற்கான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள், தண்ணீர் விநியோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எவரையும் விட்டுவிடாமல் சுத்தமான குடிநீர் வழங்குவதே ஜல் ஜீவன் திட்டத்தின் குறிக்கோளாகும்.





ஊராட்சி செயலாளர் கலா

**கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல் குடிநீர் வழங்குதல், சமுதாய சொத்துக்களை பராமரித்தல் கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்

**குடிநீர் வழங்கல்**

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன.

ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், 2016 17 ம் ஆண்டில் 51,895 குடிநீர்



பணிகள் தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி திட்டம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் கிராம ஊராட்சிகளின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ. 544.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வறட்சிக் காலத்தில் குடிநீர் விநியோகம்

2016 17ம் ஆண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் மழை பெய்தது.

இதன் விளைவாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் குடிநீர் ஆதாரங்களும் வறண்டு விட்டதால், ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணி ஊராட்சி நிர்வாகத்திற்கு சவாலாக இருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்தது.

### நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்

கீழ்க்காணும் நட்டிவக்கைகளை குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்பற்றுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து குடிநீர் ஆதாரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள கிராம ஊராட்சி வாரியாக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது.

போர்க்கால அடிப்படையில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் ஆதாரங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.15 கோடி குடிநீர் பணிகளுக்காக செலவிடப்பட்டது. குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தின.




குடிநீர் விநியோகத்தை கிராம ஊராட்சி அளவில் கண்காணிப்பதற்கு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார அளவில் கண்காணிப்பதற்கு உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறை தீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை தினசரி இணையதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### தெரு விளக்குகள் பராமரித்தல்

ஊரக பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பது, கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

அரசாணை எண் 92 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்26.03.1997 ன் படி அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 131 வரையிலான படிவங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

படிவம் எண் 1. வீட்டு வரி கேட்புத் தொகைக்கான அறிவுப்பு.

படிவம் எண் 2. வீட்டு வரி இரசீதுகள்.

படிவம் எண் 3. வீட்டு வரி (நிலுவை தொகை நடப்பு வரித்தொகை).

படிவம் எண் 4. தொழில் வரி பற்றுச்சீட்டு.

படிவம் எண் 5. தொழில் வரி பற்றுச்சீட்டு (நிலுவை தொகை நடப்பு வரித்தொகை).

படிவம் எண் 6. பல்வகை பற்றுச்சீட்டு.

படிவம் எண் 7. வரிகள் மற்றும் பல்வகை இனங்களில் வசூல் பதிவேடு.

படிவம் எண் 8. மானியங்களில், ஒதுக்கப்பட்ட இனங்களில் வசூல் பதிவேடு.

படிவம் எண் 9. கிராம ஊராட்சி நிதி சிட்டா.

படிவம் எண் 10. பல்வகை வரவு வசூல் நிலுவை பதிவேடு.

படிவம் எண் 11. ரொக்கப் புத்தகம் (கிராம ஊராட்சி நிதிக் கணக்கு).




படிவம் எண் 12. திருப்பி வசூலிக்கதக்க முன் பணங்கள் பதிவேடு.

படிவம் எண் 13. வகைப்பாடு செய்யப்பட்ட தொகை செலுத்தங்கள் பதிவேடு.

படிவம் எண் 14. பற்றொப்ப பதிவேடு.

படிவம்எண்15.மதீப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு.




படிவம் எண் 16. கிராம ஊராட்சியின் சொத்துக்கள் பற்றிய பதிவேடு.

படிவம் எண் 17. பராமரிப்பு பதிவேடு ஊராட்சியில் சொத்துக்கள் பராமரிப்பு செலவுகள் ஆகியவை பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 18 ஊராட்சியில் வாங்கப்படும் பொருட்களின் விபரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 19. செலவுச்சீட்டு இரசீது புத்தகங்களின் விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 20 . தொகை மதிப்பு படிவங்கள் குறித்து இருப்பு பதிவேடு ,அளவுச் சுவடிகள் ,ஒப்பந்த படிவங்கள் முதலியவை.

படிவம் எண் 21. விற்பனைப் பதிவேடு (முடங்கு பொருள் பதிவேடு)

படிவம் எண் 22. கட்டுமானப் பொருள்கள் குறித்த பதிவேடு

படிவம் எண் 23. ரொக்கப்புத்தகம் ( மானியங்களின் வரவினங்கள்) பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 24. ரொக்கப்புத்தகம் ( அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

படிவம் எண் 25. மதீப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு (அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேடு.

படிவம் எண் 26. ரொக்கப் பதிவேடு புத்தகம் (திட்ட நிதி).

படிவம் எண் 27. வகைப்படுத்தப்பட்ட தொகை

வரவுகள் மற்றும் தொகைச்செலவுகள்(திட்ட நிதி கணக்கு).

படிவம் எண் 28. திட்ட பணிகள் பதிவேடு மதீப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு(அளிக்கப்பட்ட மானியங்கள்) பதிவேடு.

படிவம் எண் 29. திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோர் விபரம் அடங்கிய பதிவேடு

படிவம் எண் 30. ஆய்வாளர்க்கு அனுப்ப வேண்டிய மூன்று வகை கணக்கு வரவு செலவு குறித்த மாதாந்திர விபரம்

படிவம் எண் 31. சென்ற ஆண்டின் வரவு செலவும் எதிர் வரும் ஆண்டிற்னு உத்தேசமாக மேற்கொள்ளவுள்ள வரவுசெலவு விபரம் குறிக்கப்பட வேண்டும்.

கிராம சபை கூட்டத்தில், மேலே குறிப்பிட்டுள்ள, அனைத்து படிவம் மற்றும் பதிவெடுகளை, பொது மக்கள் மத்தியில் பார்வைக்காக, கண்டிப்பாக வைக்க பட வேண்டும்.

ஆனால் AD சங்கர் அவர்கள் ஊராட்சி செயலாளர்களிடம் லஞ்சம் வாங்கி கொண்டு இதை ஒன்றும் கண்டுகொள்வதில்லை.




- அடுத்த இதழில் தொடரும்...






**நில மோசடி வழக்குகளை குறைக்கும் வகையில் வியாழக்கிழமை தோறும்**

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில மோசடி அபகரிப்பு தடுப்பு கூட்டம் நடத்தப்படும்...

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹரிகிரன் பிரசாத் பேட்டி

குமரி மாவட்டம் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹரி கிரன் பிரசாத் தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஈஸ்வரன் முன்னிலையில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது.

அப்போது பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குமரியில் 5 வகை குற்ற சம்பவம் அதிகமாக நடைபெறுவதாகவும் இனி வரும் நாட்களில் இந்த வகையான குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க மாவட்ட காவல் துறை சார்பாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர் குமரி மாவட்டத்தில் 4 மகளிர் காவல் நிலையங்கள் உள்பட மொத்தம் 33 காவல் நிலையங்களின் நுழைவு வாயிலில் 360 டிகிரி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் காவல் நிலையங்களுக்கு

புகார் அளிக்க வருபவர்கள் மற்றும் அதனை முறையாக பதிவு செய்யும் போலீசாரின் நடவடிக்கை ஆகியவற்றை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்தே கண்காணிக்க முடியும். இதற்காக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் 10 டி.வி. அமைக்கப்பட்டு போலீசார் 24 மணி நேரமும் கண்காணித்து வருவார்கள்.

மேலும் காவல் நிலைய வளாகத்தில் நடக்கும் குற்ற சம்பவங்களும் இதன் மூலம் கண்டறிய முடியும். கடந்த 4 வருட குற்றப்பதிவேடுகளை பார்க்கும் போது 5 வகை குற்ற சம்பவங்கள் குமரிமாவட்டத்தில் அதிகமாக உள்ளது. அதன்படி கடந்த ஆண்டு வேலைவாய்ப்பு மோசடி வழக்கு தொடர்பாக 400 புகார்கள் வந்துள்ளன. இதேபோல் பணமோசடி 796 வழக்குகளும் வரதட்சணை தொடர்பாக 100 வழக்குகள் அடிதடி மற்றும் கொலைமுயற்சி வழக்குகள் 580 நில மோசடியில் 400 வழக்குகளும் வந்துள்ளன. வேலைவாய்ப்பு மோசடி தொடர்பான வழக்குகளை குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.




அதன் ஒரு பகுதியாக வேலை வாய்ப்பு தொடர்பான விளம்பரங்கள் வெளிவரும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் போலீசார் நேரில் சென்று ஆய்வு செய்வார்கள். இதன் மூலம் வேலை வாய்ப்பு நிறுவனங்களின் நம்பகத் தன்மை முதலில் அறியப்படும். அது போலியாக இருந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். நில மோசடி வழக்குகளை குறைக்கும் வகையில் இனி வரும் காலங்களில் ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில மோசடி அபகரிப்பு தடுப்பு கூட்டம் நடத்தப்படும். இதில் வருவாய்த்துறை, பத்திரப்பதிவுதுறை, நிலஅளவையர் துறை மற்றும் போலீசார் கலந்து கொண்டு காவல் நிலையங்களில் உள்ள நில மோசடி வழக்கு தொடர்பாக விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்படும் எனவும் குமரி மாவட்டத்தில் இதுவரை நடந்த வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் முகாமில் 10,716 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

இதில் 2000 மனுக்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்.மாவட்டத்தில் அதிக பாரம் ஏற்றி வரும் லாரிகள் மீது அபராத நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் முறை ரூ.2 ஆயிரமும் தொடந்து அதிக பாரம் ஏற்றி வரும் லாரிகளுக்கு ரூ.24 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்படுகிறது.

மேலும் போலீசாரின் எச்சரிக்கை அறிவிப்பையும் மீறி தொடர்ந்து அதிக பாரம் ஏற்றி வரும் லாரியின் உரிமையாளர் மீது 107இ 110 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பிதிவு செய்து ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் குமரி மாவட்டத்தில் கந்துவட்டி புகார்கள் இதுவரை 3 மட்டும் வந்துள்ளன. மேலும் கந்துவட்டி சம்பந்தமாக அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை என்னிடம் நேரடியாக புகார் தெரிவிக்கலாம் எனவும் கந்து வட்டியில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



**- உதவி ஆசிரியர் H. ஹாஜாமைதீன்**




## RTI APPLICATION POINTS

# தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரும் விண்ணப்பம் அனுப்பும் போது கவனிக்க வேண்டியவை...

❖ விண்ணப்பத்தின் தேதி மற்றும் இடம்.

❖ உங்கள் முழு முகவரி மற்றும் பொது தகவல் அலுவலரின் முழு முகவரி அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்...

❖ நீங்கள் முன்னர் எதாவது மனு அனுப்பி இருந்தால் மனுவின் விபரம். பார்வை: என்ற தலைப்பின் கீழ்

❖ எந்த தேதிக்குள் வழங்கப்படும்? என்ற கேள்வி....

❖ தேதியுடன் கூடிய உங்கள் கையொப்பம்....

❖ தகவல் கோரும் விண்ணப்பக் கட்டணம். ரூ.10 செலுத்தப்பட்டதற்கான சான்று. (நீதி மன்ற வில்லை எனில்(Court fees stamp) மனுவின் மேல் பாகத்தில் ஒட்டி விடலாம்.)

❖ நீதிமன்ற வில்லையை(court fees stamp) (ஒட்டியதும் உங்கள் விண்ணப்பத்தை ஒளிநகல் (xerox) எடுத்து வைக்கவும்

❖ விண்ணப்பத்தை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்ப வேண்டும். (மேல் முறையீட்டின் போது ஒப்புதல் அட்டை முக்கியம்.

தகவல் பெறும் உரிமை சட்டத்தில் எந்தெந்த தகவல்கள் கேட்கலாம்?

❖ பதிவேடுகள் (Records),

❖ ஆவணங்கள் (Documents),

❖ மெமோ எனப்படும் அலுவலக குறிப்புகள். ( Memo Office Tips),

❖ கருத்துரைகள் (Comments),

❖ அதிகாரிகளின் கோப்பு குறிப்புகள்,

❖ அலுவலகங்களின் செய்தி குறிப்புகள் (Offices of the Information notes),

❖ சுற்றறிக்கைகள் (Circulars),

❖ ஆவணங்கள் (Documentation),

❖ ஒப்பந்தங்கள் (Agreements),

❖ கடிதங்கள் (Letters),

❖ முன்வடிவங்கள் (Model),

❖ மாதிரிகள் (Models),.

❖ கணினி சார்ந்த பதிவுகள் (Information stored in computer),

❖ மின்னஞ்சல்கள் (Emails).

❖ பொது நலன் சார்ந்த அனைத்து தகவல்கள் (All information of public good well),

❖ சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பரிசீலனை செய்யும் உரிமை, (The right to review relevant documents and records),

❖ நகல் எடுக்கும் உரிமை (Right to take Xerox) ஆகியன

தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மேல் முறையீடு:

பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தரவில்லையென்றாலோ, அல்லது அவர் அளித்த தகவல் திருப்திகரமாக இல்லையென்றாலோ அந்தந்த துறைகளில் பிரிவு 19ன் கீழ் உள்ள மேல் முறையீட்டு அதிகாரியிடம் 30 நாட்களுக்குள் முதல் மேல் முறையீடு செய்யலாம்.

மேல் முறையீட்டு அதிகாரியின் பதில் திருப்திகரமாக இல்லையெனில் 90 நாட்களுக்குள் பிரிவு 19(3)ன் கீழ் மாநில தகவல் ஆணையரிடம் இரண்டாவது மேல் முறையீடு செய்யலாம்.

மாநில தலைமை தகவல் ஆணையர்,

தமிழ்நாடு தகவல் ஆணையம்,

2, தியாகராயசாலை,

ஆலையம்மன் கோவில் அருகில் ,

தேனாம்பேட்டை, சென்னை 600018.

தொலைப்பேசி எண்: 044: 2435 7581, 2435 7580.

தகவல் தர மறுத்தால் தண்டனை Sec 20 RTI Act தகவல் மறுத்தால் ரூ 25000 அபராதம் – ஒழுங்கு நடவடிக்கை....

பொது தகவல் அலுவலர் செய்யும் பின்வரும் செயலுக்கு ரூ 25000 அபராதம் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டிவரும்.

❖ நியாயமான காரனம் இல்லாமல் விண்னப்பம் வாங்க மறுத்தால்...

❖ உரிய காலகெடுவில் தகவல் தர மறுத்தால் (30 நாட்கள்)....

❖ தகவலுக்கான வேண்டுகோளை தீய எண்ணத்துடன் மறுத்தால்....

❖ தவறான, முழுமையுறாத, தவறான எணத்தை தோற்றுவிக்கும் வகையில் தகவலை தெரிந்தே கொடுத்தால்...




❖ தகவலை அழித்தால்....

❖ தகவல் கொடுப்பதை தடுத்தால்...

பிரிவு 20(1) படி நாள் ஒன்றுக்கு ரூ 250 வீதம் அபராதம்....

ரூ. 25,000 உயர்ந்த பட்ச அபராதம்...

பிரிவு 20(2) படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை...

மேற்படி காரணத்திற்காக தகவல் ஆணையகம் மட்டுமே தண்டனை விதிக்க முடியும்...

தண்டனை விதிக்கும் முன்பு பொது தகவல் அலுவலர் விளக்கம் கேட்ட பின்னர்தான் தண்டனை விதிக்க முடியும்.

நியாயமாகவும் கவணமாக செயல்பட்ட

பொது தகவல் அலுவலர் மீது தண்டனை விதிக்க இயலாது.

குறிப்பு: பொதுவாக தகவல் ஆணையகம் தண்டனை விதிப்பதை தவிர்க்கின்றது...

தண்டனைகள் (பிரிவு20)

மாநில தகவல் ஆணையமானது, புகார் அல்லது மேல்முறையீடு எதனையும்

**தீர்மானிக்கும்போது:**

❖ பொது தகவல் அலுவலர் நியாயமான காரணம் ஏதுமின்றி தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினை மறுக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர் காலக்கெடு விற்குள் தகவலை அளிக்க மறுக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர் தகவலுக்கான கோரிக்கையினை உள்நோக்கத்துடன்

**மறுக்குமிடத்தும் ;**

❖ கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழிக்குமிடத்தும் ;

❖ பொது தகவல் அலுவலர், தகவலை அளிப்பதை எந்த முறையிலும் தடுக்குமிடத்தும்; அந்த விண்ணப்பம் பெறப்படும் வரை அல்லது தகவல் அளிக்கப்படும் வரை ஒவ்வொரு நாளுக்கும் ரூ.250/ தண்டமாக, அந்த பொது தகவல் அலுவலர் மீது விதிக்கப்படும்.

எனினும், மொத்த தண்டத் தொகையானது ரூ.25,000/க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பினும், தண்டம் விதிக்கப்படுவதற்கு முன்பு, சம்மந்தப்பட்ட பொதுத்தகவல் அலுவலருக்கு போதுமான வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

பொதுத்தகவல் அலுவலர், தான் நியாயமாகவும், கவனத்துடனும், செயல்பட்டுள்ளதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, அவரையே சார்ந்ததாகும்.

மேலும் மேற்கண்ட சூழ்நிலைகளில், பொதுத்தகவல் அலுவலருக்கு எதிராக, அவருக்கு பொருந்தத்தக்க பணிவிதிகளின்படி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட துறைக்கு ஆணையம் பரிந்துரை செய்யும்.

- சிறப்பு துணை ஆசிரியர்: Dr. S. முகமது அலி




Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN

## என்று தீரும் நாகர்கோயில் மாநகரத்தில் உழைக்கும் ஏழை தாய்மார்களின் கதறல்...




என்று தீரும் நாகர்கோயில் மாநகரத்தில் உழைக்கும் ஏழை தாய்மார்களின் கதறல் ...

**அன்று**

20 ஆண்டுகளாக நடத்தி வந்த தள்ளு வண்டி கடை பறிமுதல், 87வயது சுப்பையா பிள்ளை அவர்கள் தற்கொலை நீதி கேட்கும் வள்ளியம்மாள்.

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலையில் நாகர்கோவில் நீதிமன்ற சாலையில் உள்ள ஆரியபவன் ஹோட்டல் மற்றும் மணிமேடை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் செல்லும் சாலையில் அமைந்துள்ள பிரபு ஹோட்டல். இங்கே இருசக்கர வாகனங்கள் நிறுத்திவைப்பு கண்டு கொள்ளாத நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம்.

**இன்று**

ஒரு சாண் வயிற்றுக்காக போக்குவரத்து நெருக்கடி இல்லாத இடத்தில் உழைத்துப் பிழைக்கும் ஏழை தாயாரின் கதறல் காதில் கேட்கிறதா...?

- முதன்மை ஆசிரியர்கள்: R.M நந்தினி

# வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

**நாகர்கோவில், ஏப். 8:** சேவைக் குறைபாடு காரணமாக, வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

குமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பகுதியைச் சேர்ந்தவர் சார்லஸ் செல்வஜோஸ், ஓய்வு பெற்ற அரசு ஊழியர். இவர் அந்தப் பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தனது ஓய்வூதிய கணக்கை வைத்துள்ளார். தனது நண்பரான ராமையா என்பவர், வங்கியில் பெற்ற கடனுக்கு ஜாமீன் கையொப்பமிட்டிருந்தார். ராமையா திடீரென இறந்து விட்டதால், அவர் வாங்கிய கடன் தொகை நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், எந்தவித முன்னறிவிப்புமின்றி, ராமையாவின் கடன் பாக்கித் தொகைக்காக சார்லஸ் செல்வஜோஸ் கணக்கில் ரூ. 79 ஆயிரத்து 841 ஐ வங்கி பிடித்தம் செய்தது. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான சார்லஸ், வழக்குரைஞர் மூலம் வங்கிக்கு நோட்டீஸ் அனுப்பினார். அதற்கு உரிய பதில் கிடைக்காததால், கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் சுரேஷ், உறுப்பினர் சங்கர் ஆகியோர், தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் சேவைக் குறைபாட்டை சுட்டிக்காட்டி, வங்கிக்கு ரூ.25 ஆயிரம் அபராதமும், வழக்கு செலவு தொகையாக ரூ.5 ஆயிரம், மேலும் கணக்கில் பிடித்தம் செய்யப்பட்ட ரூ. 79 ஆயிரத்து 841 ஆகியவற்றை ஒரு மாதத்துக்குள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## வருத்தம் தெரிவித்து கடிதம்

கடந்த 15:03 2023 அன்று வெளிவந்த மனித உரிமைகள் மீட்பு இதழில் 8-9ஆம் பக்கங்களில் வெளிவந்த கிரீன் சிட்டிரியல் எஸ்டேட் நிருவனம் சம்பந்தபட்ட பத்திக்கை செய்தி வெளியிட்டதில் திருமதி. அனிதா என்பவரது பெயர் வெளிவந்ததாகவும் அதன் காரணமாக மிகுந்த மன உளைச்சல் அடைந்ததாகவும் பத்திரிக்கை நிர்வாகத்திடம் தெரிவித்திருந்தனர்.

மனித உரிமை மீறல்களை எதிர்பதே எங்களது நோக்கமே தவிர தனிநபரை பழிவாங்கும் நோக்கில் செயல்படுவது அல்ல என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

செய்தி வெளியிட்டதன் காரணமாக அவர்களது மனம் புன்பட்டிருந்தால் வருத்தம் தெரிவித்து கொள்கிறேன் என்று ஆசிரியர் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**இப்படிக்கு**

K. **மதசூதனன் (ஆசிரியர்)**



2021ம் ஆண்டு ரூ.10 லட்சம் வழிப்பறி செய்யப்பட்ட வழக்கில் சிக்கிய, நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய ஆய்வாளர் வசந்தி, காவல்துறை பணியில் இருந்து நிரந்தர நீக்கம் மதுரை சரக டி.ஐ.ஜி உத்தரவு

- தலைமை ஆசிரியர் Dr. K. கலைச்செல்வன்

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17





16